
இணையவழி வகுப்பு ~ 06.11.2020

சுற்றாடல் சார் செயற்பாடு

ஆசிரியர்:~ திரு.ஜ.சிவசங்கரலிங்கம்













www.edu.lk

தேசிய குறியீடுகள்









සිංහල
தமிழ்

4 பெப்ரவரி









“சிறி லங்கா தாயே”

www.lkedu.lk



தேசிய கொடி



தேசிய இலச்சினை

www.lkedu.lk

தேசிய கீதம்

* சிறீ லங்கா தாயே-நம் சிறீ லங்கா
* நமோ நமோ நமோ நமோ தாயே
* நல்லெழில் பொலி சீரணி
* நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
* ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
* நறுஞ்சோலை கொள் லங்கா
* நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
* நமதுதி ஏல் தாயே
* நம தலை நினதடி மேல் வைத்தோமே
* நமதுயிரே தாயே-நம் சிறீ லங்கா
* நமோ நமோ நமோ நமோ தாயே
* நமதாருள் ஆனாய்
* நவை தவிர் உணர்வானாய்

www.lkedu.lk

தேசிய மலர்

நீலோற்பலம் /நீலஅல்லி





தேசிய மரம் - நாகமரம்

www.lk

தேசிய பறவை -காட்டுக்கோழி





தேசிய விலங்கு - மரஅணில்

www.TNTEAK

தேசிய விளையாட்டு
கரப்பந்தாட்டம்/வொளிவோல்



தேசிய இரத்தினக்கல்

நீல இரத்தினக்கல்



www.edu.lk

தேசிய வண்ணத்துப்பூச்சி

இலங்கை அழகி




www.ikedu.lk

எமது நாட்டு தேசிய கொடி



தேசிய கொடியின் வரலாறு.



இன்று நடைமுறையில் உள்ள எமது நாட்டின் தேசியக் கொடியானது இலங்கையின் கடைசியாக ஆட்சி புரிந்த ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் கொடியை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்படுகிறது. இன்று நடைமுறையிலுள்ள தேசிய கொடியானது 1948 ம் ஆண்டு இருந்த கொடியின் வடிவத்திலிருந்து சில மாற்றங்களுக்கு உற்படட்டு வருகின்றது.

1948 ல் சுதந்திர தின விழாவின் போது ஏற்றப்பட்ட தேசிய கொடியானது பின்னர் தேசிய கொடி அமைப்புக்குழுவின் சிபாரிசின் படி மாற்றத்திற்கு உற்பட்டது.

செம்மஞ்சள், பச்சை, நிறக்கோடுகள் தேசிய கொடியில் சேர்க்கப்பட்டமையே அவ் மாற்றங்களாகும்.
பின்னர் 1972 ல் முதலாவது குடியரசு யாப்பு மாற்றத்தோடு மேலும் மாற்றம் செய்யப்பட்டது. அது கொடியை சுற்றி மஞ்சள் நிறமும் சிங்கத்தை சுற்றி நான்கு மூலைகளிலும் அரச இலைகளும் சேர்க்கப்பட்டமையாகும்.

இலங்கையின் தேசிய சின்னங்கள்

இலங்கையின் தேசிய இலச்சினை



1972 மே 22 ஆந் திகதி குடியரசாக நாடு பிரகடனப்ப டுத்தப்பட்டதிலிருந்து இப் புதிய குடியரசுச் சின்னம் தேர்ந்தெ டுக்கப்பட்டது. வாளுடன் கூடிய சிங்கம் மற்றும் 'பலப்பெத்தி' வடிவமைப்பு ஆகியவற்றுக்கு மேலதிகமாக அதில் பூரணக்கலசம், தர்மச்சக்கரம், சூரியன், சந்திரன் மற்றும் இரு நெற்கதிர்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டன.

www.lkqu.lk

இலங்கையின் தேசிய இலட்சினை



கலைப்படைப்பு: எஸ். எம். செனவீரத்ன - 1972

1. தர்மச்சக்கரம் - தார்மீகம்
2. நெற்கதிர் - தன்நிறைவும் செழிப்பும்
3. சிங்கம் - நாடும் கட்டுப்பாடான மக்களும்
4. மலரிதழ்கள் - தூய்மை
5. நிறைகுடம் - செளபாக்கியம்
6. சூரியன், சந்திரன் - நிலைத்திருப்பு, உலக நிலைப்பாடு

www.slk

இலங்கையின் தேசிய கீதம்

இலங்கையின் தேசிய கீதம் சிறீ லங்கா தாயே என அழைக்கப்படுகிறது. இது ஆனந்த சமரக்கோன் அவர்களால் 1940ம் ஆண்டு எழுதப்பட்டது. அதன் பின் இது 1951ம் ஆண்டு இலங்கையின் தேசிய கீதமாக பிரகடனப்படுத்தப்பட்டது

1950ம் ஆண்டில் தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தார்.

ஆனந்த சமரக்கோன் என்பவர் 1940 ஆம் ஆண்டு எழுதி ஏற்கனவே பிரபலமாகப் புழக்கத்திலி ருந்த நமோ நமோ மாதா என்று தொடங்கும் சிங்களப் பாடலும் தேர்வுக்காக நியமிக்கப்பட்டவற்றுள் அடங்கும்.

எனினும், பி. பி. இலங்கசிங்க, லயனல் எதிரிசிங்க என்னும் இருவரால் எழுதப்பட்ட ஸ்ரீ லங்கா மாதா பல யச மஹிமா என்று தொடங்கும் பாடல் தெரிவு செய்யப்பட்டு, 1948 பெப்ரவரி 4 ஆம் தேதி இலங்கையின் சுதந்திர நாளன்று வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது.

இலங்கையின் தேசிய மலர்



நீலோற்பலம்

26 பெப்ரவரி 1986 அன்று இலங்கையின் தேசிய மலராக நீலோற்பலம் பிரகடனப்படுத்தப்பட்டது. இம்மலர் இலங்கையின் பல நீரோடையிலும் பொதுவாக வளரக் கூடியது. இது நீலோற்பம், நீலாம்பல், நீல அல்லி, நீலத்தாமரை ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

இப்பூ உண்மை, தூய்மை, ஒழுக்கம் ஆகியவற்றின் சின்னமாகக் கருதப்படுகின்றது. இது புத்தருடனும் இலங்கையின் வரலாற்றில் சடங்கு மலராக பயன்பாட்டுடனும் தொடர்புபட்டது.இலங்கையில் எழுதப்பட்ட பௌத்த இலக்கியங்களில் இப்பூ பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அத்துடன் சிகிரியா ஓவியங்களில் பெண்களின் கைகளை இப்பூ அலங்கரிக்கின்றது.

இலங்கையின் தேசிய மரம்



நாகமரம்

26 பெப்ரவரி 1986 அன்று இலங்கையின் தேசிய மரமாக நாகமரம் அறிவிக்கப்பட்டது. இது இலங்கையின் வளரும் மரம், பயன்பாடு, வரலாற்றினதும் கலாச்சாரத்தினதும் முக்கியத்துவம்,தனித்துவத்துவம்,பரம்பல்,நிறம், இயற்கை போன்ற காரணங்களினால் தெரிவு செய்யப் பட்டது. தேரவாத பௌத்தம் இம்மரத்தை ஞானத்தின் அடைதலுக்கான ஒன்றாகக் கருதுகின்றது.

இலங்கையின் 96 எக்டேயர் பரப்பளவு கொண்ட தேசிய நாகமரக் காடு தன்னகத்தே ஏராளமான நாகமரங்களைக் கொண்டுள்ளது. இக்காடு 8 ஆம் நூற்றாண்டில் அனுராத புரத்தில் ஆட்சி செய்த நான்காம் தப்புல மன்னனால் உருவாக்கப்பட்டதாகப் பொதுவாகக் கூறப்படுகிறது.

நாகமரத்தின் பூ



நாகப்பூ - *Messua ferrea*

இலங்கையின் தேசிய பறவை




காட்டுக்கோழி

இலங்கைக் காட்டுக்கோழி இலங்கையின் தேசியப் பறவையாகும். இது இலங்கைக்கு உரியது. இது வீட்டில் வளர்க்கும் கோழிகளை உருவாக்கிய காட்டுக்கோழி யான, இந்தியாவின் சிவப்புக் காட்டுக்கோழி எனப்படும் கல்லஸ் கல்லஸ் வகைக்கு நெருங்கிய உறவுள்ளது

இவை காடுகளிலும் , பற்றைகளிலும் வாழுகின்றன. இலங்கையில் இவற்றை , கித்துல்கல , யால, சிங்கராஜ ஆகிய இடங்களில் காணலாம்.

ஆண் இலங்கைக் காட்டுக்கோழி சுமார் 66 – 73 சமீ. வரை நீளம் கொண்ட பறவையாகும். இது நாட்டுக் கோழி போன்ற உடலமைப்பும், செம்மஞ்சள் கலந்த சிவப்பு நிற உடலும் , கடும் ஊதா நிற சிறகுகளையும், வாலையும் கொண்டது. பெண் மிகவும் சிறியது, 35 சமீ. நீளம் மட்டுமே கொண்டது. இவை அடிவயிற்றிலும், மார்பிலும் வெள்ளை நிறம் அமைந்த, மண்ணிற உடல் நிறம் கொண்டவை.



இலங்கையின் தேசிய விளையாட்டு




கைப்பந்து

கைப்பந்து அதிகாரப்பூர்வமாக இலங்கையின் தேசிய விளையாட்டாக 1991 இல் அங்கீகரிக்கப்பட்டது. கைப்பந்து தேசிய விளையாட்டாக மாற்றப்படுவதற்கு முன்பு, 'எல்லே' ஒரு அங்கீகாரத்தைக் கொண்டிருந்தது

கைப்பந்தாட்டம் (volleyball) என்பது ஓர் அணிக்கு ஆறு வீரர்கள் வீதம் உருவாக்கப்பட்ட இரண்டு அணி வீரர்கள் ஒரு வலையால் பிரிக்கப்பட்டு கைகளால் பந்தை அடித்து ஆடுகின்ற ஒரு குழு ஆட்டமாகும். ஒவ்வோர் அணியும் தங்கள் பகுதிக்கு அனுப்பப்பட்ட பந்தை அது தரையை தொடுவதற்கு முன் கைகளால் வாங்கி, தட்டி பின்னர் எதிர்ப்பக்கத்தினரின் பகுதியில் தரையைத் தொடும்படி அனுப்புகின்ற விளையாட்டு ஆகும்

இலங்கையின் தேசிய இரத்தினக்கல்



நீலக்கல்

நீலக் கல் இலங்கையின் தேசிய இரத்தினக்கல் என ஒக்டோபர் 2003 இல் பிரகடனப்படுத்தப்பட்டது. 2 ஒக்டோபர் 2003 அன்று 4.50 இலங்கை ரூபா பெறுமதி யான தபால் தலை அறிவிப்பைத் தொடர்ந்து வெளியானது. இலங்கை நீலக்கற்களுக்கு புகழ் பெற்ற ஒரு இடமாகும்.

இக்கல் நகைகளில் இட்டுப் பயன்படுத்தப்படுகிறது. நீலக்கல் இயற்கையாக மண்படிவுகளில் கிடைக்கப் பெறுகின்றது. செயற்கையாக செய்யப்பட்ட நீலக்கற்களும் சந்தையில் விற்பனைக்குள்ளன. உயர் வண்மையைக் கொண்டுள்ளபடியால் இலத்திரனியல் கருவிகளில் அகச்சிவப்பு ஒளியில் கூறுகளிலும் நீண்ட நாள் பயன்படும் சாளரங்கள், கடிகாரப் பளிங்குகள் போன்றவற்றில் பயன்படுத்த ப்படுகிறது.

www.ilearn.lk

இலங்கையின் தேசிய வண்ணத்துப்பூச்சி



இலங்கை அழகி

இலங்கை அழகி என்ற வண்ணத்துப்பூச்சி இலங்கைக் குரியதும் தேசிய வண்ணத்துப்பூச்சியுமாகும். மேலும், இது இலங்கையிலுள்ள பெரிய வண்ணத்து ப்பூச்சியும், பரந்து காணப்படும் வண்ணத்துப்பூச்சியு மாகும். மினுமினுப்பா கருப்பு நிறத்தில் பிரகாசமான மஞ்சள் நிறத்தையும், வசிகரமான அலங்காரத்தையும் கொண்டுள்ளது.

இலங்கைத் தீவில் இதுவே பெரிய பட்டாம்பூச்சியாகவும் தீவு முழுவதிலும் பரந்து காணப்படுகிறது. இதனை இலங்கையில் மட்டுமே காணலாம். இது பயிர்களை சேதப்படுத்துவதோ அல்லது நோய்க்காவியாகவோ காணப்படுவதில்லை. இப்பண்புகளை இது கொண்டுள்ளதால் இதனை "இலங்கையின் தேசிய பட்டாம்பூச்சி" என சூற்றடல் அமைச்சினால் அறிவிக்கப்பட்டது

www.ikau.lk

தேசிய மொழி

இலங்கையின் தேசிய மொழிகளாக சிங்களமும் தமிழும் உள்ளன. இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காம் அத்தியாயம் 19 ஆம் சரத்தின்படி, சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

www.lka.lk

- **29 – 58 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

1) சூரிய நமஸ்காரம் செய்யப் பொருத்தமான நேரம்.
   1. இரவு 2. மதியம் 3. காலை

2) பின்வருவனவற்றில் எது பயத்தின் வெளிப்பாடு.
   1. கண்கள் சிவந்து காணப்படல் 2. உடல் நடுங்கி வியர்வை உண்டாதல்
   3. ஒதுங்கியிருத்தல்

3) இலங்கையின் தேசியக் கொடியில் தமிழ் மக்களைக் குறித்து நிற்பது.
   1. செம்மஞ்சள் 2. சிவப்பு 3. பச்சை


4) பாதசாரிகள் பாதையில் செல்லும் போது பயணம் செய்ய வேண்டிய பக்கம்.
   1. எந்தப்பக்கமும் 2. வலது பக்கம்
   3. இடது பக்கம்

5) பின்வருவனவற்றில் எது சிறுவர் உரிமை மீறலாகும்.
   1. கல்வி கற்றல் 2. வேலைக்குச் செல்லுதல்
   3. பெற்றோருடன் வாழ்தல்

www.ikeda.lk

1) நல்வாழ்வு வாழத்தேவையற்ற ஒரு விடயம்.
1. ஓய்வு 2. தியானம் 3. பொறாமை

2) சர்வதேச சிறுவர் தினம்.
1. ஒக்டோபர் 01 2. நவப்பர் 01 3. டிசம்பர் 10

3)  அருகில் காணப்படும் இக்குறியீடு குறித்து நிற்பது.
2. இலங்கை தொலைத்தொடர்பு சேவை 2. இலங்கை மின்சாரசபை
3. இலங்கை தபால் சேவை

4) உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவு வகை.
1. பால் 2. பருப்பு 3. வல்லாரை

5) பானம் தயாரிக்கப் பயன்படாத பழம்.
1. தோடம்பழம் 2. எலுமிச்சம்பழம் 3. பலாப்பழம்

www.ikedu.lk

1) கட்புல செவிப்புல தொடர்பு சாதனம்.

1. ஒலிபெருக்கி 2. வானொலி 3. தொலைக்காட்சி

2) சூரிய ஒளியின் மூலம் உடலுக்கு கிடைக்கும் விற்றமின்.

1. விற்றமின் A 2. விற்றமின் E 3. விற்றமின் D

3) அருகிலிருக்கும் படத்திற்கு உரியவரின் பெயர் என்ன?



1. அநாகரிக தர்மபால 2. C.W.W கன்னங்கர
3. சேர்.பொன் இராமநாதன்
4. D.P ஜாயா

4) பின்வருவனவற்றில் நீரில் கரையும் பொருள்.

1. தேங்காய்யெண்ணெய் 2. மெழுகு 3. உப்பு

5) ஊசித்துளைக் கமராவின் திரையைச் செய்யப் பயன்படுவது.

1. நிறத்தாள் 2. வெள்ளைரித்சுத்தாள்
3. அட்டைத்துண்டு

www.lkedu.lk

1) உணவு உட்கொண்ட பின்னர் உண்ண வேண்டிய உணவு எது?

1. பசுப்பால் 2. பழவகை 3. இளநீர்

2) குயில் முட்டையின் நிறம்.

1. இளம் பச்சை 2. இளம் நீலம் 3. வெள்ளை


3) உலகில் மிகப் பெரிய கண்டம் எது?

1. அவுஸ்திரேலியா 2. ஐரோப்பியா 3. ஆசியா

4) இலங்கையிலுள்ள அழகிய நீர்வீழ்சிகளில் ஒன்று.

1. தியலும 2. றத்னா 3. பம்பரகந்த

5) இவ்வுருவிலுள்ள இசைக்கருவி எவ்வகையைச் சேர்ந்தது.



1. காற்றுக்கருவி 2. தோற்கருவி
3. நரம்புக்கருவி

www.1kedu.lk

1) நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் சர்வதேச இலட்சினை.

1. SLS 2. ISO 3. MED

2) பின்வருவனவற்றில் வேரின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்.

1. மரவள்ளி 2. சதைகரைச்சான் 3. கறிவேப்பிலை

3) பின்வரும் தாவரங்களுள் நமது நாட்டுக்கே உரித்தான தாவரம் எது?

1. தென்னை 2. தேயிலை 3. காட்டிலுப்பை

4) 

படத்திலுள்ள விளையாட்டு எந்த நாட்டின் தேசிய விளையாட்டாகும்.

1. இலங்கை 2. இந்தியா 3. அவுஸ்திரேலியா

5) நீரைச் சுத்திகரிக்கக் கூடிய இரசாயனப் பொருள்.

1. கொண்டிஸ் 2. குளோரின் 3. உப்பு

www.1kedu.lk

1) இயற்கையாக ஏற்படக்கூடிய அனர்த்தங்களில் ஒன்று அல்லாதது.
1. சூறாவளி 2. மண்சரிவு 3. பாம்பு தீண்டுதல்

2) எம்பக்கதேவாலயம் அமைந்துள்ள மாவட்டம்.
1. கண்டி 2. அனுராதபுரம் 3. பொலநறுவை

3) சிறிய பொருட்களை பெரிதாக்கி பார்க்க உதவும் உபகரணம் எது?
1. ஸ்தடஸ்கோப் 2. தொலைநோக்கி
3. கைவில்லை

4) பலகையொன்றை மட்டமாகச் சீவுவதற்குப் பொருத்தமான உபகரணம்.
1. வாள் 2. உளி 3. சீவுளி

5) கிராமிய நடனங்களில் ஒன்று அல்லாதது.
1. கும்மி நடனம் 2. பரத நாட்டியம் 3. காவடியாட்டம்

(30×1=30புள்ளிகள்)

www.lkedu.lk